# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண். 110–ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 7.5.2013

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொருளாதார வளர்ச்சியின் வேகத்தை விரைவு படுத்துதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், 2023 ஆம் ஆண்டுக்குள் உற்பத்தி துறையில் 22 விழுக்காடு வளர்ச்சியை எய்துதல் ஆகிய குறிக்கோள்களின் அடிப்படையில் புதிய தொழில்களை ஏற்படுத்துவதிலும், தொழில் மற்றும் கட்டமைப்புத் திட்டங்களில் பெருமளவிலான முதலீடுகளைச் செய்வதிலும் எனது தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

1984 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை தொடர்ந்து லாபகரமாகவும், பல விருதுகளை பெற்றுள்ளதுமான தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனம் காகிதம் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த நிறுவனத்தின் காகித ஆலையிலிருந்து உருவாகும் சுண்ணாம்புக் கழிவு மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் உலர் சாம்பல் ஆகியவற்றின் மூலம் உற்பத்தியாகும் திடக் கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி காகித நிறுவனத்தால் அமைக்கப்படும் இந்தியாவின் முதல் சிமெண்ட் தொழிற்சாலையினை நான் அண்மையில் துவக்கி வைத்தேன்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ்நாடு செய்தித் தாள் காகித நிறுவனத்தின் மூலம் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சம் டன் திறன் கொண்ட, இரு புறமும் மேற் பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை, அதாவது Multilayer Double Coated Board தயாரிக்கும் ஒரு புதிய ஆலை சுமார் 1200 கோடி ரூபாய் முதலீட்டில் நவீன இயந்திர வசதிகளுடன் நிறுவப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் புதிய ஆலை திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட குளித்தலை–மணப்பாறை மாநில நெடுஞ்சாலையை ஒட்டிய மணப்பாறை வட்டத்தில் உள்ள மொண்டிப்பட்டி வருவாய் கிராமம் மற்றும் அதனை சுற்றியுள்ள வறட்சியான பகுதியில் சுமார் 989 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இதற்கான பணிகள் 2013–14 ஆம் நிதியாண்டில் தொடங்கப்பட்டு, 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முடிக்கப்படும். இதன் மூலம், சுமார் 2000 பேர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்பு உருவாகும்.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் தெற்கு கடற்கரையோரப் பகுதியில் ஓர் ஆழ் கடல் துறைமுகம், அதாவது Deep Water Port, ஒரு மிதக்கும் திரவ நிலை எரி வாயு முனையம், அதாவது Floating storage Re-gasification Unit மற்றும் 500 மெகாவாட் திறனுள்ள எரிவாயுவை பயன்படுத்தும் மின் உற்பத்தி ஆலை, அதாவது Gas based Power Plant உள்ளடக்கிய ஒரு மாபெரும் தொழில் திட்டம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமாகிய டிட்கோ மூலம் கூட்டுத் துறையில் சுமார் 3,500 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் தொழில் துறை வளர்ச்சியை ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், தமிழகத்தின் தென் பகுதியில் உள்ள மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி

ஏற்படுத்துவதற்காக செயல்படுத்தப்பட உள்ள திட்டங்களை இந்த மாமன்றத்திற்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

1. சிவகங்கை மாவட்டத்தில் ஏற்கெனவே அமைந்துள்ள மானாமதுரை சிப்காட் தொழில் வளாகத்துடன் கூடுதலாக 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் கிராபைட் மற்றும் பிற தொழிற்சாலைகள் இடம் பெறும் வகையில் புதிய தொழிற் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

2. ராமநாதபுரம் மாவட்டத்தில் பெட்ரோலிய சுத்திகரிப்பு, ரசாயனம், உரம் போன்ற தயாரிப்பு தொழிற்சாலைகள் அமைத்திடும் வகையில் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற் பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

3. புதுக்கோட்டை மாவட்டத்தில், 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் பொறியியல், உலோகத் தொழிற்சாலைகள் மற்றும் உலர் தோல் தொழிற்சாலை பூங்கா ஒன்று ஏற்படுத்தப்படும்.

4. திண்டுக்கல் மாவட்டத்தில், பொறியியல் சார்ந்த தொழிற்சாலைகள் மற்றும் உணவுப் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் சார்ந்த தொழிற் பூங்கா ஒன்று சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்படும்.

5. தேனி மாவட்டத்தில், சுமார் 2,000 ஏக்கர் நிலப்பரப்பில் உணவுப் பதப்படுத்தல் சார்ந்த தொழிற்பூங்கா உருவாக்கப்படும்.

6. விருதுநகர் மாவட்டத்தில், பட்டாசு மற்றும் தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், உணவுப் பதப்படுத்துதல், பொறியியல் மற்றும் அச்சுத் தொழிற் கூடங்கள் ஆகியவை இடம் பெறும் வகையில் ஒரு தொழில் பூங்கா 3,400 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்படும்.

7. தூத்துக்குடி மாவட்டத்தில், கடல்சார் தொழில்கள், கப்பல் கட்டுதல் மற்றும் பழுது நீக்கு தொழிற்சாலைகள், கன ரகப் பொறியியல் உலோகத் தொழில் மற்றும் இரசாயனத் தொழில்கள் ஆகியவற்றை ஈர்க்கும் வகையில் சிப்காட் நிறுவனத்தால் சுமார் 6000 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற் பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

8. திருநெல்வேலி மாவட்டத்தில், ஒளி மின் தகடுகள், சூரிய ஒளி சேகரிப்பான்கள் மற்றும் இதர புதுப்பிக்கத் தக்க எரிசக்தி தொடர்பான இயந்திரங்கள், கருவிகள், வீட்டு உபயோகச் சாதனங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் பொறியியல் தொழில்கள் அமையும் வகையில், சுமார் 1,500 ஏக்கர் நிலப்பரப்பில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையம் Renewable Energy Hub ஒன்று ஏற்படுத்தப்படும்.

9. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல்சார் தொழிற்சாலைகளை Marine Industries-ஐ ஈர்க்கும் வகையில் தொழிற் பூங்கா சுமார் 250 ஏக்கர் நிலப்பரப்பில் அமைக்கப்படும். இவற்றுடன் பொறியியல் சார்ந்த தொழில்கள், ரப்பர் தொழில்கள் மற்றும் சுற்றுலாத் தொழில் ஆகியவையும் ஊக்குவிக்கப்படும்.

தென் மாவட்டங்களில் தற்போது உள்ள மற்றும் அமைய உள்ள சிப்காட் தொழிற் பூங்காக்களில் தொழிற்சாலைகளை அமைக்க முன் வரும் தொழில் முனைவர்களை ஊக்குவிக்கும் வகையில் கீழ்க்காணும் சலுகைகள் எனது தலைமையிலான அரசால் அளிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

1. சிப்காட் நிறுவனத்தால் 50 சதவிகித மானிய விலையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும். இம்மானியம் சிப்காட் நிறுவனத்திற்கு அரசால் நேரடியாக திரும்ப அளிக்கப்படும்.

2. நிலம் பத்திர பதிவுக்கான முத்திரைத் தாள் கட்டணத்தில் 100 சதவிகித விலக்கு அளிக்கப்படும்.

3. மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிக்கப்படும்.

4. தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் உருவாக்கப்படும்.

5. மதிப்புக் கூட்டிய வரி, அதாவது VAT அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்த பட்ச முதலீட்டுத் தொகையான 50 கோடி ரூபாய் என்பது 10 கோடி ரூபாயாக குறைக்கப்படும்.

மேற்காணும் நடவடிக்கைகள் தென் தமிழ்நாட்டில் தொழில் முனைவோர்கள் அதிக அளவில் உருவாகவும், வேலைவாய்ப்புகள் மேலும் பெருகவும், தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு முதல் இடத்தை எய்தவும் வழி வகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

*******